பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Time Reader
11/40 Pm.
12/30 Am.
Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 20 சனிக்கிழமை (07-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 137

# இளம்தாயும் இரு பிள்ளைகளும் வல்லையில் நேற்று உடல் சிதறிபலி!

## வடமராட்சியில் ஷெல் வீச்சு

வடமராட்சி, ஒக். 7

வடமராட்சிப் பகுதி மீது நேற்றுக்காலை பலாலியில் இருந்து நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலினால் இளம் தாயும் அவரது இருபிள்ளைகளும் உடல் சிதறிப் பலியாகினர். மற்றொரு பிள்ளையும் பெண் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

வல்வெட்டித்துறை மானங்கனைப் பகுதியில் காலை 8.15 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

படையினர் ஏவிய ஷெல்கள் இப்பகுதியில் பரவலாக விழுந்து வெடித்தன. ஷெல் தாக்குதல்களை அடுத்து பாதுகாப்புத்தேடி கோயிலுக்குச் செல்ல ஆயத்தமான வேளையிலேயே இவர்கள் மூவரும் ஷெல்லுக்குப் பலியாகினர்.

மானங்கனைப் பகுதியைச் சேர்ந்த சண்முகசுந்தரலிங்கம் தவமலர் (வயது 23) அவரது பிள்ளைகளான ச. நித்திலா (வயது 5), ச. சரண்ராஜ் (வயது 7) ஆகிய மூவருமே பலியானவர்களாவர்.

இவரது மற்றொரு பிள்ளையான ச. சரண்யா (வயது 8) மற்றும் குணலிங்கம் மகாலட்சுமி (வயது 38) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர் இவர்கள் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஷெல் தாக்குதலினால் இவர்களது வீடும் சேதமானது.

இதேவேளை —

நேற்று முன்தினம் இரவும் வடமராட்சி பகுதி மீது ஷெல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக்கடலில் தாழ்வு அமுக்கம்

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலத்தை அடுத்து தமிழகத்தின் பல இடங்களிலும் பலத்த மழை பெய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் சுமார் 150 பேர் உலக ஆசிரியர் தினமான நேற்று கொழும்பு லிப்ரன் சதுக்கத்தில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அரசு ஏற்பாடு செய்த உலக ஆசிரியர் தின விழா பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்வி உயர் கல்வி அமைச்சர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை லிப்ரன் சதுக்கத்தில் இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமது சங்கத்துடன் எதுவித தொடர்புகளையும் வைத்துக் கொள்ளப் போவதில்லை எனக் கூறி ஆசிரியர்களின் பிரச்சினைகளை அமைச்சர் றிச்சாட் பத்திரன தட்டிக்கழித்து வருகிறார் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (ஐ)

# மட்டக்களப்பில் மினிமுகாம் புலிகளால் நேற்று தகர்ப்பு!

## 8 படையினர் பலி! நால்வர் காயம்!!

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 7

மட்டக்களப்பின் எல்லையோர ஸ்ரீலங்கா இராணுவ மினிமுகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி, கைப்பற்றி, எரித்து முற்றாக அழித்தனர்.

இதன்போது எட்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நான்கு இராணுவத்தினர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தாண்டாக்காடு இராணுவ முகாமில் இருந்து 600 மீற்றர் தொலைவில் இருக்கும் மினிமுகாம் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தினர்.

9 நிமிடநேரத் தாக்குதலில் மினிமுகாம் புலிகளிடம் வீழ்ந்தது.

இத்தாக்குதல் நடந்து கொண்டிருந்த வேளை தாண்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## கோட்டும் மழையிலும் நேற்றிரவு ஷெல் வீச்சு!

### புத்தூர் ஆவரங்காலில் மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 7

வலி. கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றிரவு 8-30 மணிமுதல் கொட்டும் மழைக்கு மத்தியிலும் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்

மழை பெய்யத் தொடங்கியதும் அகோர ஷெல் வீச்சு ஆரம்பமானது.

இடிமுழக்கத்தின் மத்தியில் ஷெல் சத்தங்கள் தொடர்ச்சியாக கேட்டவண்ணம் இருந்தன.

இடிமுழக்கம் ஒருபுறமும், ஷெல் முழக்கம் மறுபுறமும் என்ற வகையில் இரண்டு முழக்கங்களில் எது இன்ன வகையினது என்று வித்தியாசப்படுத்த முடியாதவாறு சத்தங்கள் காதைப் பிளந்தன.

புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

படையினரின் ஷெல் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை (ஐ)

# கைப்பற்றிய பகுதிகளை படையினர் விட்டுச்செல்ல மாட்டார்களாம்!

## இடிமுழக்க தாக்குதல் தொடரும் என அறிவிப்பு

கொழும்பு, ஒக். 7

"இடிமுழக்கம்" இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றிய பிரதேசங்களை விட்டுச் செல்லும் நோக்கம் எதுவும் இல்லை — என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கூடுதல் பிரதேசத்தைக் கொண்டு வர வேண்டும்; விடுதலைப் புலிகள் போராளிகளை இயன்றளவு அதிக எண்ணிக்கையில் அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை இடிமுழக்க இராணுவ நடவடிக்கை தொடரும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியதாக ரூபவாஹினி நேற்றிரவு அறிவித்தது. (ஐ)

## அடுத்த கட்ட நடவடிக்கை; தளபதிகளே தீர்மானிப்பர்

### இராணுவப் பேச்சாளர் தகவல்

அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து களத்தில் உள்ள தளபதிகளே தீர்மானிப்பர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

நான்கு நாள்கள் இடம்பெற்ற இடிமுழக்கத் தாக்குதல் குறித்து செய்தியாளர்கள் வினவிய போது சரத் முனசிங்கா இவ்வாறு பதிலளித்தார். (ஐ)

# குடாநாட்டில் மாவுக்கு தட்டுப்பாடு பாண் உற்பத்தி நிறுத்தப்படலாம்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான வெதுப்பகங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் பாணை உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் மா கையிருப்பு முடிவடைந்துள்ளதே இதற்கான காரணமென்று யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கைவசம் எஞ்சியுள்ள 5 "லோட்" மாவையும் இடம்பெயர்ந்தோர் அதிகம் தங்கியுள்ள சாவகச்சேரி பகுதி வெதுப்பகங்களுக்கு வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மா ஏற்றிவரும் கப்பலான "ஹெந்தல" யாழ்ப்பாணத்திற்கு கடைசியாக வந்து ஒரு மாதம் ஆகிறது. சென்ற மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர் "ஹெந்தல" கப்பல் யாழ்ப்பாணத்திற்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வெளிச் சந்தையில் கூடுதல் விலைக்கு [illegible] பாணை உற்பத்தி செய்து மா விலைக்கு ஏற்ப பாணை வி[illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் இழப்பு 75

யாழ்ப்பாணம், ஒக். 7

"இடிமுழக்க தாக்குதல்" இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை அரச தரப்பு செய்திகளின்படி 75 ஆக உயர்ந்துள்ளது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 129 எனவும்.

இதில் இருவர் அதிகாரிகள் எனவும் — அறிவிக்கப்பட்டது.

நேற்று வலிகாமத்தில் நடந்த தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப் பட்டதாகவும், ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றெட்பானா

## நிவாரண புனர் வாழ்வுத் திட்டம்

மேற்படி திட்டத்தில் கோப்பாய்ப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்த எமது பயனாளிகளாகிய தாய்மார், பாதுகாவலர், அனாதரவான சிறார்கள், முகாம் குழு நிர்வாக சபையினர், தையல் பயிற்சியில் பங்கு பற்றுவோர், சிறுவர்-இளைஞர் கழகத்தினர், ஆங்கில/பாலர் பாடசாலை ஆசிரியர்கள் யாவரும் தாங்கள் தற்பொழுது தங்கியுள்ள இடங்கள் பற்றிய தங்கள் விபரங்களுடன் திட்ட காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். மேற்படி விடயத்தில் தங்கள் ஒத்துழைப்பு எமது எதிர்கால செயற்பாடு பற்றி தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்கும்.

★ இடம்பெயர்ந்த றெட்பானா ஊழியர்கள் 09 - 10 - 95 அன்று திட்டகாரியாலயத்தில் தயவு செய்து சமுகமளிக்கவும்.

திட்ட இணைப்பாளர் - றெட்பானா
யாழ்ப்பாணம்.

15, நக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

(38896)

# O/L இலவச மீட்டல் வகுப்பு

## ஆரம்பம்: 10 - 10 - 1995

★ யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து இலவசமாக நடத்தப்பட உள்ள இவ் வகுப்பு

கந்தர்மடம்
யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில்
நடைபெறும்.

★ வகுப்புகள் மாணவர்களின் வசதிக்கேற்ப பகல் முழு நேர மாலை, இரவு நேர வகுப்புகளாக நடைபெறும்.

★ 09 — 10 — 1995 (திங்கள்) இன் முன்னர் பெயர்களைப் பதிவு செய்யுங்கள்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[சி-2428]

# அந்தியக் கிரியை அழைப்பு



மலர்வு: 16 — 03 — 1924

உதிர்வு: 28 — 09 — 1995

அன்புடையீர்!

28 - 09 - 1995 வியாழக்கிழமை சிவபதமடைந்த

## அமரர் சோமசுந்தரக்குருக்கள் வடிவழகாம்பாள்

அவர்களின்

அந்தியக் கிரியைகள் கீழ்வரும் தினங்களில் நடைபெறும்.

07 — 10 — 95
சனி மு. பகல் 10மணி — தசாகம்
08 — 10 — 95
ஞாயிறு — ஏகோதிஷ்டம், மாசியம்
09 — 10 — 95
திங்கள் — சபிண்டீகரணம்
10 — 10 — 95
செவ்வாய் பகல் — கிரயைக்குரு, சமாராதனை

இக் காலங்களில் தாங்களும் வந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
செ. பரமானந்தக்குருக்கள்
(மருகர்)

'பங்கஜ வாசம்',
கல்வயல்,
சாவகச்சேரி.

(38896)

## மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

கைதடியில் உள்ள யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறை மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் விரிவுரைகளுக்குச் செல்லாமல் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இது வரை சித்த மருத்துவத் துறையின் தலைவராக இருந்த வைத்தியக் கலாநிதி சு. பவானியை அப் பதவியில் இருந்து நீக்கியதை ஆட்சேபித்தே மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருவதாக அறியவந்தது. (ஐ)

## சித்திரப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.7

நல்லூர். யாழ்ப்பாணம் ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு 3, 4, 5 ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சித்திரப் போட்டிகள் இம் மாதம் 10 ஆம் திகதி பாடசாலை மட்டத்திலும் 18 ஆம் திகதி கோட்டமட்டத்திலும் நடைபெற உள்ளதாக கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நல்லூர் கோட்டமட்டப் போட்டிகள் யாழ். வைத்தீஸ்வரா மத்திய மகாவித்தியாலயத்திலும், யாழ்ப்பாணக் கோட்டமட்டப் போட்டி யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலையிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் போட்டிகளில் 15, 19 வயதுப் பிரிவு மாணவர்களுக்கான சதுரங்கம், பட்மின்ரன் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று காலை 9 மணி முதல் நடைபெறும்.

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் பகுதிகளின் மாணவர்களுக்கு சதுரங்க போட்டியும் — யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட மாணவர்களுக்கு பட்மின்ரன் போட்டியும் — நடைபெறும். [இ-3]

## பலாலி ஆசிரிய கலாசாலை பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 7

பலாலி ஆசிரிய கலாசாலையின் 1993/94 இருவருடப்பயிற்சியை வர்த்தக நெறியில் பயின்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் —

பரீட்சை முடிவுகளை மேற்படி கலாசாலை அலுவலகத்தில் பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நூன சித்தியடைந்தோர் மீண்டும் தோற்றுவதற்குரிய விண்ணப்பத்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு கலாசாலை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஓ)

## மெதடிஸ்த தலைவருக்கு தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 7

புத்தூரில் படையினரின் பிடியில் சிக்கி உள்ளோர் குறித்து அருட்திரு. கருணைராஜ், கொழும்பில் உள்ள மெதடிஸ்த மகாசங்கத்தலைவருக்கே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் தகவல் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இது [illegible] விக்கப்படுகிறது. [இ]

# அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வரையறுள்ளது]

## முக்கிய அறிவித்தல்

30 - 09 - 1995 திகதியுடன் முடிவடைந்த காலாண்டுக்கான வாக்காளர் பட்டியல்

இச்சங்கத்தின் 30 - 9 - 95 திகதியுடன் முடிவடைந்த காலாண்டுக்கான வாக்காளர் பட்டியல்கள் கீழ் குறிப்பிடப்படும் முகவரிகளில் உள்ள எமது நிவாரண விநியோக நிலையங்களில் 9 - 10 - 95 தொடக்கம் பத்து நாட்களுக்கு (21 - 10 - 95 வரை) காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கிளை இலக்கம் 01 — இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி
கிளை இலக்கம் 02 — மானிப்பாய் வீதி கோப்பாய் சந்திக்கருகில்
கிளை இலக்கம் 03 — கல்வியங்காடு சந்தி நிவாரணக் கிளை
கிளை இலக்கம் 04 — இ. போ. ச. டிப்போ வீதி, கோண்டாவில்
கிளை இலக்கம் 05 — மருதனார்மடம், நிவாரணக் கிளை
கிளை இலக்கம் 06 — மருதனார்மடம், நிவாரணக் கிளை
கிளை இலக்கம் 07 — கைதடி சந்தி, நிவாரணக் கிளை
கிளை இலக்கம் 08 — கோண்டாவில் பலாலி வீதி, நிவாரணக் கிளை
கிளை இலக்கம் 09 · இருபாலை பழம் றோட் நிவாரணக் கிளை
கிளை இலக்கம் 10 — மாதிரி விற்பனை நிலையம் மருதனார்மடம் தலைமைக் காரியாலயம்.
கிளை இலக்கம் 11 — மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்திக்கருகில்
கிளை இலக்கம் 12 — மாதிரி விற்பனை நிலையம் மருதனார்மடம் தலைமை காரியாலயம்

மேற்படி 12 கிளைகளின் வாக்காளர் பட்டியல்களை சங்கத் தலைமைக் காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

இவ் வாக்காளர் பட்டியல்களில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் 21 - 10 - 95 திகதிக்கு பிந்தாமல் செயலாளர், அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம், உரும்பிராய் வீதி, மருதனார் மடம் என்ற முகவரிக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்,
உரும்பிராய் வீதி,
மருதனார்மடம்.
06- 10- 95

[சி/2431]

# சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவு சங்கம் சாவகச்சேரி

## கிளைமுகாமையாளர் பதவிக்கான பயிற்சியாளர்

## விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு எமது சங்கத்தின் பயிற்சி பெற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. விண்ணப்பதாரர் சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. வயது 23 — 40
3. ஆளுமை: நேர்முகப் பரீட்சையின் போது தீர்மானிக்கப்படும்.
4. கல்வித் தகைமை: 208.14

   கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) பத்திரம்/க. பொ. த. (சாதாரணம்) இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / தூயகணிதம் / வர்த்தக கணிதம் / தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கிய 6 பாடங்களில் சித்தி.
5. விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து, ''பொது முகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி'' என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 15 - 10 - 1995 க்கு முன் சங்கக் காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

குறிப்பு:
மேற்படி பயிற்சிக் காலம் ஒரு வருடமாகும். இக் காலத்துள் தமது பயிற்சியை திருப்தியாகவும், பூரணமாகவும் நிறைவு செய்பவர்களுக்கு எமது சங்கத்தில் வெற்றிடம் ஏற்படும் போது முன்னுரிமை அளிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

25 - 09 - 1995

[சி-2411]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் புனித யாகப்பர் ஆலயம் புனிதப்படுத்தும் திருநிகழ்வுச் சிறப்பிதழ்

07-10-1995

## ஆயரின் ஆசிச்செய்தி



கார்த்திகை மாதம் 1993 ம் ஆண்டு விமானக் குண்டு வீச்சில் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் சிதைக்கப் பட்டதையும் பன்னிரு உயிர்கள் பறிக்கப்பட்டதுமான பரிதாபநிகழ்வு இன்னும் எங்கள் கண்களை விட்டு அகலவில்லை. இதனால் பங்கு மக்கள் வழிபடுவதற்கு ஆலயமின்றித் தவிப்புற்று, தம் ஆலயத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய அருப்பாடுபட்டனர்.

பங்குமக்களின் முயற்சியினாலும், பங்குத் தந்தையின் அயராத உழைப்பினாலும் வெளிநாடுகளில் வாழும் பக்தர்களின் அன்புக் கொடைகளினாலும் இவ்வாலயப் புனருத்தாரணப் பணிகள் முற்றுப்பெற்றுள்ளன.

இத்தருணத்தில் இவ்வாலயத்தையும், பாதிப்புற்ற மக்களையும் தரிசித்து ஆறுதல் கூறி, இவ்வாலயக் கட்டுமானப்பணிக்கு பெரும் தொகைப் பணத்தையும் அன்பளிப்புச் செய்த கொழும்பு பேராயர் அதிவந்தனைக்குரிய நீக்கிளஸ் மார்க்கஸ் பர்ணாந்து அவர்களை நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

எமது மறைமாவட்டத்தின் மூலமாகவும் இயன்ற பங்களிப்புச் செய்து ஆலய மக்களின் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கினோம். ஆலய வேலைகள் பூர்த்தியாகி அதனை மக்கள் வழிபாட்டுக்குத் திறந்து வைக்கும் வேளையில் இதற்காக முன்னின்று உழைத்த அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து, இப் போர்க்காலத்தில் மக்களையும், ஆலயத்தையும் பாதுகாக்க இறையருள் வேண்டி நிற்கிறேன்.

— யாழ். ஆயர் அதிவண.
தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

## பங்குத் தந்தையின் ஆசி



"கோயில் இல்லாத இடத்தில் குடி இருக்காதே" என்னும் முதுமொழிக்கேற்ப 1861 ஆம் ஆண்டு குருநகரில் குடி இருந்த மக்கள் 222 அடி நீளம் 72' அடி அகலம் என்ற விஸ்திரணத்தை கொண்ட கோயிலை அமைக்க தொடங்கினார்கள். காலாகாலத்தில் அது நிறைவேற்றப்பட்டு 1993 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ஆம் திகதிமட்டும் நிலைத்து நின்றது. அன்று சனி காலை 7-25 மணிக்கு இரண்டு விமானக் குண்டுகளால் அது நிலை குலைக்கப்பட்டது. பங்கு மக்களின் மனங்களும் நிலை குலைந்தன.

வாழ்வின் எல்லா கட்டத்திலும் எதிர் நீச்சல் போடும் குருநகர் மக்கள் "கட்டி எழுப்புவோம்" என்ற ஒரே நிலையில் மீளவும் அதே ஆலயத்தை அதே பரிமாணத்தில் அதே சிற்பாஸ்திரிய விதத்தில் கட்டி எழுப்பி விட்டார்கள். இன்று புதிய ஆலய பிரவேசம் செய்கின்றார்கள்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

என்பது இந்த திரு நிகழ்ச்சியில் புலன் ஆகின்றது. ஆலயத்தின் ஊடாக ஆண்டவனின் நிறை அருள் பெற்று, குருநகர் மக்கள் வாழ, வாழ்த்தி நிற்கின்றேன்.

"இறை ஆசீர் என்றும் உங்களோடு"

R. M. G. நேசநாயகம்,
பங்குத் தந்தை.

புனித யாகப்பர் ஆலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

### இறைவரத்தோன் யாகப்பரே!

கடல் அலைகள் கொஞ்சும் நகரின் காவலனே வாழ்க
கலை குலவும் விஞ்சு நகர்க் கோமகனே வாழ்க
சுடர் பெருகும் துணை அருளும் தூயவனே வாழ்க
இடர் அருளும் இறை வரத்தோன்யாகப்பரே வாழ்க!

அருட்திரு நீ. மரியசேவியர்,

## 134 ஆண்டு பழைமை மிக்க ஆலயம் மீண்டும் குருநகரில் நிமிர்ந்து நிற்கிறது

யாழ் நகர் மத்தியிலே பிரமாண்டமான அமைப்போடு பொலிவுபெற்று நிற்கும் புனித சந்தியாகுமாயோர் கோவிலானது தனது 134ஆம் ஆண்டை பூர்த்திசெய்து நிற்கின்றது. இக்கோவிலானது அடியார்களின் வழிபாட்டுத் தலமாகவும் யாத்திரைத் தலமாகவும் 1560 இல் சிறுத்தீவு குருநகர் ஊடாக யாழ். நகர், நல்லூர், கோப்பாய் போன்ற இடங்களில் இருந்து சிலுவை கொடியை ஏந்திவந்த குருக்கள் குருநகர் பகுதியூடாகவே சென்றனர். இப்பெருமை இம்மண்ணுக்கு கிடைத்த ஒரு வரலாற்றுச் சிறப்பம்சமாகும். தமிழ் மன்னர்களின் நிகழ்வை மனதில் கொண்டு வந்திருக்கலாம்.

அதுமட்டுமல்லாமல் ஸ்லாமிய படைக்கு எதிராக இறையேசுவின் மிகுந்த பற்று நிறைந்த அப்போஸ்தலரான சந்தியோகுவையே உள்ளக்கருவறையில் நிலைநிறுத்தி அவர் வெண் குதிரையில் முன் சென்று எதிரிகளை விரட்டி



சிறந்து விளங்கிவந்துள்ளமை பலரும் அறிந்த ஒன்றாகும். ஆனால் இக்கோவில் பிரபல்யம் அடைவதற்கு 1993ஆம் ஆண்டு அதன்மேல் வீசப்பட்ட சுப்பர்சோனிக்குண்டே காரணமெனலாம் இதுவே

### யாழூர் வளவன்

இக்கோவிலின் உச்சக்கட்ட புகழுக்கு காரணமாக அமைந்துவிட்டது.

குருநகர் மக்கள் மனதில் தமக்கென ஒரு ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் நீண்ட நெடு நாட்களாக இருந்து வந்தது. ஆனாலும் வண. பிதா மொறோயே காலத்திலேயே இது பூர்த்தியானது. அதாவது 19ஆம் நூற்றாண்டின் அக்காலத்தில் குருநகர் பகுதியில் பிரபல்யமாயிருந்த கட்டட கலைஞர்களாலும் மேஸ்திரிகளாலும் தொழிலாளர்களின் கடின உழைப்பினாலேயேயும் இந்த ஆலயம் உருவமைப்பு பெற்றது.

போர்த்துக்கேயர் படையெடுப்பு காலங்களில் குருநகர் கிராமம் ஒரு முக்கியமான பகுதியாக அமைந்திருந்தது.

படகோட்டிகளும் படைவீரர்களுமான இக்குருகுல மக்கள் கடும் போர்களின் மத்தியில் ஆக்கிரோசமாக முழங்கிய ஒலி "சந்தியாகு சந்தியாகு" என்பதேயாகும்.

போர்த்துக்கேய ஸ்பானிய வீரர்கள் தமது வெற்றிக் கோஷமாக இச்சத்தத்தையே முழங்கினர் ஏனெனில் அவர்கள் தமது நாட்டு விடுதலை வரலாற்றில் முகமதியசேனை ஸ்பானிய நாட்டை ஏறக்குறைய 500 வருடங்களாக ஆக்கிரமித்து இருந்த வெறுப்புணர்ச்சி அவர்களை ஒன்றிரண்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக 3,700 தடவைகள் விடுதலை போர் தொடுத்த வரலாற்று புறமுதுகு காட்ட வைத்த அனுபவத்தையே தாமும் முன்னேறும் போதும் கொண்டிருந்தனர்.

இது மட்டுமல்லாமல் இங்கும் தென் தமிழகத்திலும் விஜய நகரப் பேரரசுப் படைகளும் மகமதிய படைகளும் ஏழைத் தமிழ் கிறிஸ்தவர்களை துன்புறுத்திய நிலையிலேயே தான் முக்குவர் மக்களும் பரதக் குலத்தவர்களும் தமது வாழ்வின் விடிவெள்ளியாக தம்மை மீட்க வந்த கத்தோலிக்க மிசனறி குருக்களிடம் அடைக்கலம் புகுந்தனர். இவ்விரு சேனைகளையும் யாழ். மண்ணில் சந்தித்த போர்த்துக்கேய இராணுவதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அனைவருக்கும் நன்றி

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தை புனரமைக்க பொருளுதவி, பண உதவி, சரீர உதவி செய்தவர்களுக்கும், அதிமேற்றாணியார் யாழ். ஆயர் மற்றும் கட்டட ஒப்பந்தக்காரர் வெற்றிவேல் மனோகரன் ஆலயப் புனரமைப்புச் சபையினர் அனைவருக்கும் ஆலயச் சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கி. கிறிஸ்தோப்பர்
செயலாளர்
புனித யாகப்பர் ஆலய சபை,
குருநகர் பங்கு.


புனிதப்படுத்தும திருநிகழ்வு இனிதே சிறப்புற வாழ்த்துகிறோம்



லாவண்யா பல், மூக்குக்கண்ணாடி அகம்



175, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

<—— கிளைகள் ——>

வி. ரி. அன் சன்ஸ்
375, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

லாவண்யா
224, கண்டி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

நல்ல புதிய Honda Express Automatic Starter Model (Ladies), 2½ அடி சதுர இரும்புப் பெட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு; புதிய இல. 608, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (38806)

அமுதா இறைண்டர், R. A. Lister 8H. P. [English] விற்பனைக்குண்டு. ஸ்ரீகரன் மில், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. [38885]

அடை வைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இரைர வானழக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். [38888]

நல்ல நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மேசை ஆகியன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 88, முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பின்னால்) [38819]

*மணப்பெண்கள் தேவை*

வயது 45. 43 [பட்டதாரி] இந்து வியாபாரிகள் தனியார வாழ்பவர்களுக்கு தொழிலுள்ள அல்லது கல்வி அறிவுள்ள, சுவதிர தோஷ் ஜாதகமுள்ள மணப்பெண்கள் தேவை. பட்டதாரி மணமகனுக்கு வெளிநாடு செல்லக் கூடியவர் விரும்பத்தக்கது. முழுவிவரம் ஜாதகத்துடன் சுயமாக விண்ணப்பிக்கவும். இல. 855, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [38877]

*புலமைப்பரிசில்*

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அடிப்படைக் கல்வி 1995 முதல் நடைமுறைக்கு வரும். புதிய பரீட்சைத் திட்டத்துக்கு அமைவான வழிகாட்டியும் வினா விடைக் கொத்தும், ஆக்கம்: வி. என். எஸ். உதயசந்திரன் வெளியீடு: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2400)

## ஐரிஷ் கவிஞருக்கு இவ்வாண்டு நோபல் பரிசு

ஸ்ரொக்ஹோம், ஒக். 7

இலக்கியத்துக்கான இவ்வாண்டு நோபல் பரிசு ஐரிஷ் கவிஞரான சேமஸ் செய்னிக்கு வழங்கப்படவுள்ளது.

வட அயர்லாந்தில் பிறந்த செய்னி தற்போது டப்ளினில் வசிக்கிறார்.

10 லட்சம் டொலர் பரிசு இவருக்கு வழங்கப்படுவதாக சுவிடிஷ் கல்வி அக்கடமி அறிவித்துள்ளது.

ஆழமான நெறிகள் பொதிந்த அழகிய கவிதைகளை சேமஸ் செய்னி படைத்துள்ளார் என்றும் அந்த அக்கடமி தெரிவித்துள்ளது. (ஐ)

## நாட்டுக் கூத்து

சென். ஜேம்ஸ் தேவாலயம் புனரமைக்கப்பட்டு புனிதமயப்படுத்தல் நிகழ்வைச் சிறப்பிக்க குருநகர் இயலிசை நாட்டுக்கூத்து மன்றம் "செந்தூது" என்னும் நாட்டுக்கூத்தை தயாரித்து மேடை ஏற்ற இருக்கிறது.

புனிதரின் சரிதத்தை உள்ளடக்கிய மேற்படி நாட்டுக்கூத்து நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய முன்றலில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் நடைபெறும். [ஜ-51]

---

## 90 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில்: 19 — 01 — 1979

அரசன் அழிப்பில்: 09 — 07 — 1995

### செல்வன் செ. பிரதீஸ்
(பிரசாத்)

வையகத்தில் பிறந்து உள்ளத்தைக்
கொள்ளை கொண்டு இனித்தவனே
செல்லமாய்க் கதை பேசி நீ
இன்பமாய் நாமிருக்க
உளம் மிக மகிழ்ந்து நாம் இருக்கையிலே
சனம் ஊர் விட்டு ஓடுதென நாம் அறிந்து
உளம் நொந்து நீ நின்றாய்
பணம் கொண்டு எரிபொருள் வாங்கச் சென்றாய்
காலம்தான் போட்ட கோடு
காலனாய் வானில் வந்து
யாருந்தான் எண்ணவில்லை நம்
ஊருந்தான் திகைத்ததையோ
பாருங்கள் பாவி செய்கையிதை
பாருங்கள் என்றார்கள் யாருக்கும் தெரியாது
பாருங்கள் என் மகனையென
பார்க்கவென வந்தவர்கள் "பிரசாத்" எனக்
கூக்குரலிட்டார்கள் நீ உடன்
கூடுவிட்டுப் பறந்து விட்டாய்
கூவியழுதும் தீரவில்லை நம் கவலை.

இந்நாளில் உமது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அன்பு அம்மா, அப்பா, தம்பி,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். [38860]

---

## 91ஆம் நாள் நினைவில்



மலர்வு: 07 — 10 — 1978

உதிர்வு: 09 — 07 — 1995

செல்வன்

### எஸ். ஜெகதீபன் ஜீவதாஸ்
(மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன்)

அழுதழுது புரண்டாலும் மாண்டவர்கள்
மண்ணுலகிற்கு திரும்ப வருவதில்லை
பிரிந்தது உனது உடற்கூடுதான்
உன் நினைவு என்றென்றும் எம்மோடுதான்
உடலளவால் தான் பிரிந்தாய் ஆனால்
நினைவில் எம்மோடுதான் இருக்கின்றாய்
விதிக்கு உன் உடலை அழிக்கத்தான் தெரியும்
உன் நினைவை எம் நெஞ்சத்திலிருந்து
யாராலும் எப்பொழுதும் அழிக்க முடியாது.

உன்பிரிவால் துயருறும்;

அம்மா, அப்பா,
அண்ணாமார்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். (38824)

---

யாழ். இந்து
பழைய மாணவர் சங்கம்
நடத்தும்

## முழுநிலா நாள் கருத்தரங்கு

காலம்: 08 - 10 - 1995 ஞாயிறு மாலை 3 . 00 மணி

இடம்: குமாரசாமி மண்டபம் (யா. இ. க)

கருத்துரை: இலங்கை அரசியலில் திருகோணமலை — ஓர் ஆய்வு

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

செயலாளர்,
யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்.

(சி-2424)

---

## ஓராண்டாய் உன்நினைவே



பூவுலகில்: 04 — 11 — 1952

வானுலகில்: 18 — 09 — 1994

### அமரர் கந்தசாமி இந்திரகுமார்

திதி: 07 - 10 - 1995

குறும்பும் குதூகலமுமாய் நிறைந்திருந்த-
உம் வாழ்வு
கரும்பும் கற்கண்டாய் கனிந்திருந்த வேளையிலே
இரும்பு மனம் கொண்ட இயற்கையன்னையவள்
விரும்பியுமை விண்ணிற்கு அழைத்துமேன்
நரம்பும் நரையும் திரையுமாய்
நானிலத்தில் மூப்பு உம்மை
நாடியணுகுமுன்னே தேடியுமக்கு
நற்பதவி தருவதற்கோ,


உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மகன், அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணிமார்,
பெறாமக்கள் மற்றும்
உற்ற நண்பர்கள், உறவினர்கள்.

21, முதலாம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
நீராவியடி. (38825)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 24 — 06 — 1954

அன்னியன் அழிப்பு: 06 — 10 — 1992

அமரர்

### காசிப்பிள்ளை சண்முகநாதன்

திதி: - 07 - 10 - 1995

எம்மை ஆறாத் துயரிலாழ்த்தி மீளாத் துயில் கொண்டிருக்கும் இனிய தெய்வமே எம்மை விட்டுப் பிரிந்து வருடம் மூன்று ஆனாலும் உங்கள் பிரிவால் துயருறும்.

அன்பின் அம்மா, மனைவி,
பிள்ளைகள்.

38, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (38887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி விரத காலத்திலாவது வடக்கில் அமைதி காக்க வேண்டும்

## ஐ. தே. கட்சி எம். பி. நாடாளுமன்றில் கோரிக்கை

எதிர்வரும் தீபாவளி நாவில் கந்தசஷ்டி விரதத்தை வடபகுதி மக்கள் அனுஷ்டிக்க ஆரம்பிப்பர். இக் காலப் பகுதியிலாவது மனித நேயத்தின் பேரில் தீபாவளி நாள் முதல் 10 தினங்களுக்கு அரசாங்கம் வடபகுதியில் அமைதி காப்பதற்கு முன்வர வேண்டும்.

— இவ்வாறு ஐ. தே. க. வவுனியா மாவட்ட எம். பி. திருமதி இராஜமனோகரி புலேந்திரன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், தவறான இலக்குகளில் ஷெல் மற்றும் குண்டுத் தாக்குதல்கள் நடைபெறக் கூடாது. குண்டுகளை பொது மக்கள் வாழும் இடங்களில் போடுவதால் ஏற்படும் உயிர்ச் சேதங்களை தவிர்க்க அரசு செயற்படவேண்டும்.

வவுனியாப் பகுதியில் தாண்டிக்குளத்திற்கு அப்பால் உணவுப் பொருள்கள் கொண்டு செல்ல முடியாத தடைநிலை நீடித்துள்ளது. வட பகுதியில் உணவுப் பற்றாக்குறை நீடிக்கிறது. வடபகுதி மக்களின் பிச்சை கேட்கவில்லை தமக்கு அடிப்படைத் தேவையான உணவைத்தான் அங்கு அனுப்பி வைக்குமாறு கேட்கின்றனர் —

# அன்ரனோவை மீட்கும்பணி எப்போது ஆரம்பமாகும்?

## உறுதியாகக் கூறமுடியாதாம்

கொழும்பு, ஒக். 7

ஜா-எல கடலில் வீழ்ந்த விமானப் படையின் அன்ரனோவ் விமானத்தை மீட்கும்பணி எப்போது ஆரம்பமாகும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது என அதனை மீட்கும்பணியில் ஈடுபட்டுள்ள 'மாஸ்டர் டைவேர்ஸ்'' கம்பனி தற்போது அறிவித்துள்ளது.

அடுத்த சில தினங்களில் விமானத்தை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் இடங்கள் என்பன ஆராயப்படும்.

இதற்கான செலவுகள்பற்றியும் ஆராயப்படும் என மாஸ்டர் டைவேர்ஸ் கம்பனியினர் தெரிவித்தனர்.

இந்த விமானம் கடலில் விழுந்ததற்கான காரணத்தைக் கண்டு பிடிப்பதற்கு முன்னர், அதன் சிதைவுகளை ஆராய வேண்டும் என விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்

30 தொன் எடையுள்ள இந்த விமானம் 700 மைல் வேகத்தில் 4 ஆயிரத்து 500 அடி ஆழத்தில் கடலுக்கு அடியில் புதையுண்டு உள்ளது.

இதனால் விமானம் அனர்த்தத்திற்கு உள்ளானதற்கான காரணத்தை இலகுவில் கண்டுபிடிக்க முடியாது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

[ஒ-எ]

# முதியோர் தின விழா இன்று கைதடி இல்லத்தில் நடக்கும்

தென்மராட்சி, ஒக். 7

சர்வதேச முதியோர் வாரத்தை யொட்டி தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் நடத்தும் முதியோர் தின விழா இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் இல்லப் பொறுப்பதிகாரி திருமதி இ. துரைரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகமும் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் திருமதி கமலா சிவசிதம்பரமும் கலந்து கொள்வர்.

கைதடி முதியோர் இல்லத்தின் 41ஆவது ஆண்டு நிறைவு விழாவின் ''சிறப்பு மலர்'' வெளியீடும் நடைபெறும்.

[ஒ-117]

## மாதகல், காரைநகர் கடலில்

# கடற்படையினரின் ரோந்து திடீரென அதிகரிப்பு

மாதகல், காரைநகர் வரையிலான கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்து கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் இக்கடற் பிராந்தியத்தில் ரோந்து சென்ற கடற்படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து கரையோரப் பகுதிகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த அப்பகுதி மீனவர் மீன்பிடித் தொழிலை இடைநிறுத்தி வீடு திரும்பினர்.

துப்பாக்கிவேட்டுக்கள் கரையோரக் குடிமனைகளில் விழுந்து சிதறின. (ஒ-15)

## அன்பளிப்பு

தென்மராட்சி, ஒக். 7

'இடிமுழக்கம்' இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து சாவகச்சேரி பகுதி நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கவென சாவகச்சேரியில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனத்தினர் 600 பிளாஸ்ரிக் நீர் அருந்தும் குவளைகளை சாவகச்சேரி நகர விபோ கழகத்தினரிடம் கையளித்துள்ளனர்.

[எ-117]

# அரச படைக்கு விநியோகம் தடைப்பட்டால் போரை கைவிட்டு சரணடையும் நிலை வரும்

வடபுலத்திலுள்ள சிங்களப் படைக்கான விநியோகங்களைச் சீர் குலைத்து விடல் என்பதுதான் புலிகள் இயக்கத்தின் தற்போதைய போர் உபாயம் ஆகும்.

குடாநாடு மீதான படையெடுப்பை முறியடிக்க, தலைவர் பிரபாகரன் வகுத்த இந்தப் போர்த் தந்திரத்தை - கடற்புலிகளும், விமான எதிர்ப்புப் பிரிவினரும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இது காரணமாக வடபுலப் படையினருக்கான கடல் - வான் வழி விநியோகங்கள் பெரிதும் சீர் குலைந்துள்ளன என, இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி, கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

'குடாநாட்டைக் கைப்பற்றி விடுதல்' என்ற பேராசையுடன் வடபுலம் நோக்கிப் பெருமளவு படையினர் நகர்த்தப்பட்டதால், சிங்கள அரசு கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியை இழந்துநிற்கின்றது. அது காரணமாக அங்கே அமைக்கப்பட்டிருந்த அத்துமீறிய குடியேற்றத் திட்டங்களில் இருந்து சிங்களவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள் அது மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தின் அரசுப் பொருளாதாரத்தையும் இப்போது, புலிவீரர்கள்சிதைத்து வருகின்றனர்.

வடக்கிற்கு அனுப்பப்பட்ட படையினரைமீண்டும் திருப்பி அழைத்தாலும் கூட, முன்பிருந்தது போல சிறுசிறு முகாம்களை அமைத்து கிழக்கை, ஆக்கிரமித்து வைத்திருக்கலாம் என்ற கனவை, சிங்களப் படைத் தலைமை இனிமேல் காணமுடியாது. அந்தளவுக்கு, நிலைமையைப் புலிகள் இயக்கம் பயன்படுத்தி வருகிறது.

### புலிகளுக்கு சாதகம்

இந்தக் களநிலைமை புலிகளுக்குச் சாதகமாக மாறிவருவதுடன் போராட்டத்திற்கு ஒரு வளர்ச்சியையும் கொடுத்துள்ளது எனலாம்.

சந்திரிகா அரசுடனான பேச்சுக்கள் முறிவடைந்ததற்கான பிரதான காரணிகளில் ஒன்று கிழக்கு மாகாணத்தில், போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அரசு அனுமதிக்க வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை அரசு ஏற்காது விட்டமை ஆகும்.

ஆனால், இன்று கிழக்கின் களநிலைமை எப்படி இருக்கின்றது? பெரும்பகுதி நிலம் புலிவீரர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது! அங்கே போராளிகள் சுதந்திரமான முறையில் ஆயுதங்களுடன் நடமாடி வருகின்றனர்.

எனவே புலிகளின் சாதாரண ஒரு கோரிக்கையை ஏற்க மறுத்த சந்திரிகா அரசு போர் தொடங்கக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்கி விட்டு, இப்போது கிழக்கின் பெரும் பகுதியில் இருந்து தனது படைமுகாம்களையே அகற்றி விட்டது அப்படியாயின் இதை முன்னரே செய்து சமாதானப் பேச்சுக்கு வலுவூட்டியிருக்கலாமே!

### சில சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டி வரும்

யாழ். குடாநாட்டில் இப்போது, நாற்பதாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் துருப்புக்கள்வரை குவிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் படைக்குவிப்பு காரணமாக, வடபுல முகாம்களின் எல்லைகளை மேலும் விரிவுபடுத்த அரசுப்படைகளுக்குச் சுலபமாக இருக்கின்றது.

ஆனாலும், யாழ்ப்பாணம் மீதான பெரு படையெடுப்பு என்று வரும்போது, படைகள் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என்பது திண்ணம்.

ஒரு போரின் வெற்றி என்பது அதன் வெற்றிகரமான விநியோகத்தில் தங்கியிருக்கின்றது. வடபுலத்தில் குவிக்கப்பட்டுள்ள படையினரைப் பொறுத்தளவில் அதன் விநியோக வழிகள் கடலும் வானும்தான். போர் நடைபெறும்போது அதன் விநியோகம் இடைவடையுமாயின் அது, ஒட்சிசன் முடிந்த சிலிண்டருடன் நீருக்கு அடியில் இருப்பதற்கு ஒப்பானதாகி விடும்.

இந்த நிலையில், உயிரைப் பாதுகாக்க வேண்டுமாயின், நீரின் மேற்பகுதிக்கு கட்டாயம் வந்தே தீர வேண்டும். அதுபோல ஒரு மரபுவழிப் படைக்கான விநியோகங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டால், அது போரைக்கைவிட்டு சரணடைய வேண்டிய கட்டாய நிலைக்குள் தள்ளப்படலாம்.

> ஒரு போரின் வெற்றி என்பது அதன் வெற்றிகரமான விநியோகத்தில் தங்கியிருக்கிறது. வடபுலத்தில் குவிக்கப்பட்டுள்ள படையினரின் விநியோக வழிகள் கடலும் வானும்தான்......

### சரணடையும் அதிசயங்கள் உலகில் நடந்துள்ளன

விநியோக வழிகள் அடைக்கப்பட்ட நிலையில் தனித்து விடப்பட்ட பல பத்தாயிரம் பேர் கொண்ட பெரியபடையணிகள் கூட, ஒரு சில ஆயிரம் பேர் கொண்ட எதிர்த்தரப்புப் படையிடம் சரணடைந்து விடும் அதிசயங்கள், உலகத்தில் நடந்தேறியிருக்கின்றன.

வியட்னாம் மீதான பிரான்சிய ஆக்கிரமிப்பிற்கு முடிவு கட்டிய ''தீன் - பீன் - பூ'' சமரில் பிரான்சியப் படைகளின் தோல்விக்குப் பிரதான காரணம். அதன் விநியோக வழிகளை வியட்னாம் போராளிகள் அடைத்தது தான். [illegible] பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரான்சியத் துருப்புக்கள், வியட்னாம் போராளிகளிடம் சரணடைந்தன.

இதேபோல, பங்களாதேஷ் தனிநாடாக உருவாக்கப்பட்டபோதும் இலட்சக்கணக்கான பாகிஸ்தானியத் துருப்புக்கள் இந்தியப் படைகளிடம் சரணடைந்தன. இதற்குப் பிரதான காரணம், பங்களாதேஷில் நிலைகொண்டிருந்த பாகிஸ்தானியப் படையினர் தமது தாய்நாட்டுடனான விநியோகத் தொடர்புகளை முற்றாக இழந்து போனமைதான்.

அத்துடன், மிக அண்மையில் சுதந்திரம் பெற்ற தேசமான எரித்திரியாவிலும் இந்த அதிசயம் நடந்திருக்கிறது. எரித்திய தேசத்தின் எதிரிகளான எத்தியோப்பிய அரசப் படைகளில் பல்லாயிரக்கணக்கானோர், தமது நாட்டுடனான 'தொப்புள்கொடி' அறுந்ததினால் — டாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்களுடன்— எரித்திரியப் போராளிகளிடம் சரணடைந்ததையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

### வானிலும் கடலிலும் புலிகளின் கைகள் ஓங்கியுள்ளன

தற்போதைய நிலையில்— தமிழீழக் கடலிலும் வானிலும்— புலிகளின் கைகளே படிப்படியாகப் பலமடைந்து வருகின்றன. இதைச் சிங்கள இராணுவ ஆய்வாளர்களே வெறுப்புடன் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இந்த நிலையில், வடபுலத்தில் குவிக்கப்பட்டுள்ள ஐம்பதினாயிரம் சிங்களப்படைகளை எண்ணிப் பீதியடையவேண்டியது தமிழ் மக்கள் அல்ல; அது சிங்கள தேசத்திற்குரிய கவலை ஆகும்!

ஆனாலும் நாம் சும்மா இருக்க எமது மண்ணில் அதிசயங்கள் சில நிகழவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் முறையல்ல! விநியோக வழிகள் சிதைந்துள்ளதால், தொடர்ச்சியாகப் போரிடும் ஆற்றலைக் குடாநாட்டிலுள்ள சிங்களப் படைகள் இழக்கப்போகின்றன என்பது உண்மையே ஆகும்.

### காத்திருக்கும் புலிகள்

இருந்த பொழுதிலும், படையெடுப்பைக் கைவிட்டுவிட்டு, படையினர் பலாலிக்குள் பதுங்கி இருக்கப்போகின்றனர் என்று நாம் கற்பனை பண்ணவும் கூடாது. குடாநாட்டின் பெரும்பகுதி நிலத்தைக் கைப்பற்றுவதன் மூலம் இழந்துபோயுள்ள விநியோக வழிகளை ஏதோ ஒரு வகையில் திறப்பதற்கு, அரசப் படைகள் முயலக்கூடும். அத்தகையதொரு முயற்சியை எதிர்பார்த்து புலிகள் இயக்கம் காத்துக்கிடக்கின்றது.

அந்த முயற்சியை நாம் முறியடிப்போமானால், அதன் பின்னர், குடாநாட்டிலுள்ள சிங்களப் படைகளுக்கு, புலிகளிடம் சரணடைவதைத் தவிர வேறுவழிகள் இருக்க மாட்டாது. இந்த வரலாற்று நிகழ்ச்சி நிச்சயம் நடந்தே தீரும் என்பதில், புலிகள் இயக்கத்திற்கு முழு நம்பிக்கை உண்டு.

சந்திரிகா அரசின் புதிய போர் முறைத் திட்டத்தில் சிங்கள இராணுவ இயந்திரத்தின் புதைகுழியும் உள்ளது என்பதை வரலாறு காட்டும். ஆயினும், இந்த வரலாற்றுச் சாதனையை நிறைவேற்றுவதற்கு தமிழர் படைக்கு கூடுதல் ஆட்பலம் தேவை என்பதை, எமது மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த மாரிகாலம் முடிய முன்னர் புலிகள் இயக்கத்தின் ஆட்பலம் பல ஆயிரங்களால் அதிகரிக்குமானால், அடுத்த வருடத்தில், பல அதிசயங்கள் குடா நாட்டுக்குள் நிகழும்!

நன்றி:
விடுதலைப் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரத்தூண்டல் குறைந்த நெல்லை பயிரிடுவதில் விவசாயிகள் நாட்டம்

அராலி ஒக். 7

வடபகுதி மீது ஏராக விதித்துள்ள உரத்தடையை] அடுத்து இங்குள்ள விவசாயிகள் உரத்தூண்டல் குறைவான விதை நெல் இனங்களை பயிரிட்டு வருகின்றனர்.

இதற்காக பழைய நெல் இனங்களான பெரியவெள்ளை மொட்டைக் கறுப்பன், சின்ன வெள்ளை போன்ற உள்ளூர் நெல் இனங்களும், பழைய திருந்திய இனமான H4 இனமும் விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்டு பயிரிடப்படுகின்றன.

இதற்கு முன்னர் அதி கூடிய விளைச்சலைத் தரக் கூடிய நவீன நெல் இனங்களே பயிரிடப்பட்டன.

இவை உரப்பிரயோகத்தை மிக அதிகளவில் நாடி நிற்பதால் விவசாயிகள் பழைய நெல் இனங்கள் மீது தற்போது நாட்டம் கொண்டுள்ளனர்.

இதனால் வெளிமாட்டங்களில் இருந்து இந்தக் காலபோகச் செய்கைக்காகத் தருவிக்கப்பட்ட விதை நெல்லை கொள்வனவு செய்ய விவசாயிகள் பின்னடிப்பதை அவதானிக்க முடிகிறது.

இதே சமயம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் உள்ள வயல்களை இயன்றளவு செய்கைக்கு உட்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி உரிய பலனைத் தரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதிகளில் இராணுவத்தினரின் அச்சுறுத்தல் நிலவுவதால் வயல்களுக்குச் செல்ல அநேக விவசாயிகள் அஞ்சுகின்றனர். (ஒ-எ-12)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வோயா தினக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தின் மத்திய மருந்துக்களஞ்சிய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் 'குழந்தைகளின் விருத்தி' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன் கருத்துரையாற்றுவார்.

(ஒ-4)

★ ★ ★

சமூக சேவையாளர்களுக்கான புற்றுநோய் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்க மண்டபத்தில் நடைபெறும் இதில் புற்றுநோய்த் தடுப்புச் சங்க தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரன் கருத்துரையாற்றுவார்.

(ஒ-4)

★ ★ ★

ஏற்கனவே கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளில் இந்து சமயம், இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு, இன்றும், நாளையும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும் என யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [எ]

## வரணியில் புதிய வடிசாலை

தென்மராட்சி, ஒக். 7

பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தென்மராட்சி கொத்தணியினர் 65 லட்சம் ரூபா செலவில் புதிய வடிசாலை ஒன்றினை வரணியில் அமைக்கவுள்ளனர்.

வரணியில் ஏற்கனவே உள்ள மதுசார வடிசாலைக்கு அருகில் புதிய வடிசாலை அமைக்கப்படவுள்ளது.

இந்த புதிய வடிசாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த நாலாம் திகதி இடம்பெற்றது.

(எ-117)

## ஷெல்லினால் காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

வலிகாமம் கிழக்கில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது ஷெல்லினால் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

இடைக்காட்டில் இருந்து இடம் பெயர்ந்த சந்திரசேகரம் இராசகுமார் (வயது 17) என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஒ-15)

## 134 ஆண்டு பழைமை.....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தினருக்கும் மன்னாரில் இருந்து வந்த தமிழ் கிறிஸ்தவர்களுக்கும் "சந்திராகு" என்ற விருது வாக்கு அடிக்கடி வாயினால் உச்சரிக்கப்பட்டமை ஆச்சரியம் இல்லை.

தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் குறிக்கப்படும் காவல் தெய்வங்களுக்கு பதிலாக கிறிஸ்தவர்கள் தமது வீடுகளிலும் ஊர்களிலும் காப்பாற்றும் காவல் தெய்வங்களாக கணித்திருந்த நான்கு புனிதர்களில் சந்தியோகுமாயோரும் ஒரு சிறந்த காவல் புனிதர் ஆகும். ஏனையோர் புனித அந்தோனியார், புனித அதி தூதர் மிக்கேலும், அன்னை மரியாளும் ஆவர்.

இவ்வாறு பதியிலும் யாழ். நகர் பதியிலும் இக் காவல் புனிதர்கள் அமைந்த ஆலயங்களைக் காணலாம் சங்ககால இலக்கியங்கள் பேசும் பூம்புகார் காவிரிப்பூம்பட்டணத்தில் அமைந்திருந்த காவல் தெய்வங்கள் போன்று அன்றைய கிறிஸ்தவர்கள் நகரங்களையும் வீடுகளையும் காவல் செய்ய இந்த முறையைப் பின்பற்றினர். இவற்றை செப்பேட்டு (மந்திர தகடு) யந்திரங்கள் ஆக கத்தோலிக்க மக்கள் வரைந்து வீடுகளில் வைத்திருந்தனர். அதுமட்டும் அன்றி கோயில் சிம்மாசனங்களில் வைத்து போற்றினர்.(நாவாந்துறை புனித நீக்கிலார் கோயிலில் இதன் உருவ அமைப்பைக் காணமுடிகிறது].

17 ஆம் நூற்றாண்டு போர்களின் பின்னர் கிறிஸ்தவர்களான குருநகர் மக்கள் டச்சுக் கம்பனியின் கொடுமையினாலும் வதைகளினாலும் எழுந்த தாங்கொணா துயரத்தின் மத்தியிலும் தமது நீண்ட ஆன்மிகப் போராட்டத்தினால் இப் பகுதியை மிகுந்த இடுக்கண்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாக்கிய தொற்றுநோய் நொடிகள் பேய் பிசாசுகளின் தொல்லைகளுக்கு மத்தியிலும் கத்தோலிக்கர்களான இக்காவல் புனிதர்களில் கொண்டிருந்த அவராக்கியமான உறுதியும் மற்றும் கத்தோலிக்க சத்துரு சங்கார மாலையில் காணக்கிடக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் இவ் ஆறவர்களாகிய குருநகர் மக்கள் சந்தியோகுமையோரையே தமது காவலராக கொண்டிருந்தமை அவர்கள் 19 ஆம் நூற்றாண்டில் புனித சந்தியோகுமையருக்கு இப்பகுதியில் நிரந்தரமாக கோயில் கொள்ள வழிவகுத்தது என்றால் அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை ★

---

திருமணமானவர்களுக்கு

### கருத்தரங்கும் கலந்துரையாடலும்

தொடர்பு வழி உறவு

காலம்: 08 - 10 - 1995
பி. ப. 3-00—6-00 வரை

இடம்: "அகவொளி"
குடும்பவளத் துணை நிலையம்,
131, பங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
[புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அருகில்)


வழங்குபவர்: திரு. P. A. C ஆனந்தராஜா,
பணிப்பாளர்,
சாந்திகம்.

-இயக்குநர்.

[38886)

---

### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் பரமநாதன் குசநாதன்

(யாழ். புனித ஜோன பொஸ்கோ வித்தியாலய மாணவன்)

மலர்வு: 29 — 10 — 1982

உதிர்வு: 23 — 10 — 1991

திதி: 07 - 10 - 1995

எம்மினிய குசனே எம்மைவிட்டு
விண்ணுலகம் சென்று நான்கு ஆண்டுகள் ஆயினும்
எம் நினைவு என்றும் உன்னோடு.

உம் பிரிவால் வாடும் உமதன்பு;
அப்பா, அம்மா,
அண்ணா, தம்பிமார்.

நாதன் களஞ்சியம்,
213,C மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்,

67/42, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

[38852]

---

### வணிகப்புள்ளி விபரவியல் 1997 (A/L)

செ. இளங்குமரன் B.Sc. (Hons), MSc.
விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

✶

முன்னர் கொடுத்த அறிவித்தலின்படி விரிவுரை வகுப்புக்கள் 03 - 10 - 1995 இல் ஆரம்பமாகி உள்ளன.

(ஏற்கனவே பதிவு செய்த மாணவர்கள் சமுகம் கொடுக்கவும்)

செவ்வாய், வியாழன் ) 3 - 4 p.m.

அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும். மாதாந்த கட்டுரை வகுப்புக்கள் நடத்தப்படும்.

விவரங்களுக்கு;

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
பருத்தித்துறை வீதி,
(ஆனைப்பந்திச் சந்தி)
யாழ்ப்பாணம்.

[சி-2425]

---

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
(12 — 07 1995 இல் நடைபெற இருந்த)

திரிவேணி சங்கமத்தினரின்

### கலைக் கதம்ப நிகழ்ச்சி

இடம்: யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய திறந்த வெளி அரங்கு

காலம்: நாளை 08-10-95 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி

பிரதம விருந்தினர்:
திரு. கு. சிவபாலன்
[பொறியியலாளர், யாழ். கல்வித் திணைக்களம்]

✶ நிகழ்ச்சிகள் ✶

நாடகம்

1. குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் பள்ளி எழுந்திடுவீர்
2. யா / கனகரத்தினம் ம. ம. வித்தியாலய திரிவேணி சங்க நாடக மன்றத்தினரின் ஆனை கட்டிய அரியாத்தை

இசை, நடனம்

3. பாடசாலை மாணவர்களின் இசை, நடன நிகழ்ச்சி
4. தமிழ் ஈழத்தின் பிரபல பாடகர்களின் இன்னிசை வார்ப்புகள்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

[38891]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## இறுதிக் கட்டம்

ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகள் வலிகாமம் கிழக்கில் தொடங்கிய இடிமுழக்கம் ஓய்ந்துவிட்டதா? அல்லது திடீரென அது மீண்டும் முழங்குமா? புதிய முழக்கம் புத்தூர் வழியாக யாழ்ப்பாண நகரை நோக்கி வருமா? முழக்கம் மழையே இல்லாமல் மீண்டும் மூலக்களமான பலாலி நோக்கித் திரும்புமா?

குடாநாட்டு மக்களின் மனங்களில் இப்போது எழும் கேள்விகளில் சில இவை.

யாழ்ப்பாணத்து மக்கள் மட்டுமென்ன கொழும்பில் பாதுகாப்பு உயர்வட்டாரங்களும், இராணுவ மேலதிகாரிகளும் இனிமேல் என்ன செய்வது என்று தெரியாமல் மூக்கின் நுனியில் விரலை வைத்தபடி இருக்கிறார்கள்!

''இடிமுழக்கம்'' தாக்குதல் மூலம் புதிதாக 21 சதுர கிலோ மீற்றர் இடப்பரப்பைத் தாம் கைப்பற்றிவிட்டதாகவும்—

தமது துருப்புக்கள் அப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதாகவும் —

கணிசமான மக்கள் அப் பகுதிகளில் வாழ்வதாகவும்—

அரசாங்கம் தென்னிலங்கை மக்களுக்கு வானொலி மூலமும், தொலைக்காட்சி மூலமும் பெரும் எடுப்பில் பிரசாரம் செய்கிறது.

அது மட்டுமா? இத்தாக்குதலை வழிநடத்திய மேஜர் ஜெனரல் றொகான் தலுவத்தவும், மேஜர் ஜெனரல் ஜனக பெரேராவும் இடிமுழக்கத்தை பெருவெற்றியாகக் [மகா ஜெயக்கிரானய] கொண்டாடுகிறார்கள்.

மக்கள் இல்லாத வெறும் பிரதேசங்களைப்பிடிப்பது இலகு; ஆனால் இராணுவம் அங்கு நிலைகொண்டிருப்பது கடினம் என்பது வடக்கு - கிழக்குப் போர்ப் புலத்தின் இதுநாள் வரையான அனுபவம்.

இம்முறை அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து நிலைகொள்ளலாம்; நிரந்தரமாக ஆக்கிரமித்து விடலாம் என்று இராணுவம் நம்புகிறது.

அதற்கான புதிய மூலோபாயம் எதனையும் அது வகுத்திருக்கிறதோ என்னவோ......

ஆனால் இராணுவம் எந்த மூலோபாயத்தை வகுத்தாலும், அதனை முறியடித்து அவர்கள் ஆக்கிரமித்த பகுதிகளை மீட்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று வாழ்வதற்கு வகை செய்யும் எதிர் மூலோபாயம் விடுதலைப் புலிகளிடம் உண்டு.

இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியும் என்றும், போரின் வேகத்தைக் குறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை என்றும் அமைச்சர் அனுருத்த கூறியிருக்கிறார்.

அவர் சொல்வது போலவே செய்யவும் முற்படுவாரானால் அரசு இராணுவத் தீர்வை மட்டுமே நாடி நிற்கிறது என்பது நிதர்சனமாகி விடும்.

இராணுவத் தீர்வை மட்டுமே முற்றுமுழுதாக நம்பியிருக்கும் அரசு தமிழர்களின் அழிவு குறித்துக் கவலைப் படப் போவதில்லை.

எனவே அரசு நடத்த இருக்கும் பேரழிவைத் தடுக்க விடுதலைப் புலிகளின் கரங்களை மக்கள் பலப்படுத்த வேண்டிய கட்டாய தேவை, முன்னர் எப்போதையும் விட இப்போது உருவாகி உள்ளது.

அரசு இதனை இறுதிப் போராகக் கொள்வதால், தமிழர்களும் வாழ்வா அன்றிச்சாவா என்பதனை முடிவு செய்ய வேண்டிய கடைசிக் கட்டமாக இது மாறுகிறது.

# படையினரிடமிருந்து தப்ப மகளை பெட்டகத்தினுள் மூடி வைத்த தாய்

## ஆவரங்காலில் சம்பவம்

சாவகச்சேரி, ஒக். 7

இராணுவம் வருவதைக் கண்டதும் எனது மகளை பெரிய பெட்டகம் ஒன்றினுள் இறக்கி ஒரு நாள் முழுவதும் மூடி வைத்து காப்பாற்றினேன்.

இவ்வாறு தமக்கு நேர்ந்த அனுபவத்தைக் கூறினார் ஆவரங்காலைச் சேர்ந்த ஆழ்வார் பவளம் (வயது 55) என்ற தாயார்.

ஆவரங்கால் பகுதியில் தனது மகளுடன் படையினரின் பிடியில் சிக்கி தப்பிவந்த இவர் மட்டுவில் பகுதியில் தற்போது தஞ்சமடைந்துள்ளார்.

தாம் தப்பிவந்தது குறித்து உதயன் செய்தியாளரிடம் அவர் தெரிவித்ததாவது:-

அதிகாலை வேளை பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டன. என்ன ஏது என்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றேன். திடீரென வீட்டுப் பக்கம் இராணுவத்தினர் வருவது தெரிந்தது.

அப்போது 26 வயதான எனது மகளும் என்னுடன் இருந்தாள்.

இராணுவத்தின் பிடியில் இருந்து அவளை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாமல் பதறிப்போனேன்.

### பெட்டகத்துக்குள் மகள்

அப்போது வீட்டில் எம்மிடம் இருந்த 4 அடி உயரமான பெட்டகம் ஒன்று என் நினைவுக்கு வந்தது.

உடனே அவசரமாக மகளை அதற்குள் இறக்கி ஒளிந்து இருக்கச் செய்துவிட்டு பெட்டகத்தை மூடினேன் நான் மட்டும் வெளியே நின்றேன். பதற்றப்படாமல் ஒருவாறு என்னைச் சுதாகரித்துக் கொண்டு நின்றேன்.

அச் சமயம் வீட்டுக்குள் வந்த படையினர் என்னை கவனிக்கவில்லை அவர்களின் கவனம் அங்கு நின்ற சேவல் மீதே இருந்தது. ஆமி ஒருவன் தனது கத்தியால் அந்தச் சேவலுக்கு எறிந்தான். அது தப்பி விட்டது. அவர்கள் அதனைத் துரத்திக் கொண்டு ஓடிப்போய் விட்டனர்.

அதன் பின்னர் இராணுவத்தினர் அந்தப் பக்கம் வரவில்லை அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பதற்றத்தின் மத்தியிலும் தேநீர் வைத்து றொட்டியும் சுட்டேன். பெட்டகத்தை திறந்து மகளுக்கு அவற்றைக் கொடுத்தேன். வெடிச்சத்தங்கள் பயங்கரமாகக் கேட்டன. சிறிது நேரம் தரையில் படுத்துக் கிடந்தேன்.

சற்று நேரத்தின் பின் மீண்டும் இராணுவத்தினர் வீட்டுக்கு வந்தனர். அடுப்படிக்குள் புகுந்து மிளகாய்த் தூளை போத்தலுடன் எடுத்துச் சென்றனர். சிலர் தண்ணீர் கேட்டனர். பானையுடன் கொடுத்தேன் தண்ணீரை ஊற்றிவிட்டு பானையைக் கொண்டு சென்றனர்.

### ஆடு, மாடுகள் அலறும் சத்தம்

கொல்லப்படும் ஆடு, மாடுகள் அலறும் ஒலி அப்பகுதி எங்கும் கேட்டது. படையினர் ஆடு, மாடுகளை கொன்று சமயல் செய்துள்ளனர் போலும்.

அன்றைய பகல் பொழுதை இவ்வாறே பயப்பீதியுடன் கழித்தோம். மாலையானதும் மகளை பெட்டகத்தினுள் இருந்து வெளியே அழைத்து இருவருமாக ஒளிந்து ஒளிந்து அச்சுவேலிப் பக்கமாக வெளியேறினோம். எங்கும் மயானம் போலக்காட்சி அளித்தது. இராணுவ நடமாட்டம் இல்லாத பிள்ளையார் கோவில் ஒன்றில் அன்றிரவு தங்கினோம்.

மறுநாள் அங்கிருந்து ஆட்டுப்பட்டி என்ற இடத்துக்குச் சென்று தங்கினோம். பின்னர் உடுப்பிட்டி சென்று தென்மராட்சிக்கு வந்தடைந்தோம்.

எனது தாயாரான நா. சின்னி என்பவருக்கு என்ன நடந்தது. அவர் எங்குள்ளார் என்பது தெரியவில்லை என்று கண்ணீர் மல்க கூறி முடித்தார் அந்த வயோதிபத் தாயார். (ஐ-31)

# புத்தூருக்கு பொருள்களை எடுக்க சென்றவர் ஷெல் அதிர்வால் மரணம்

## கூடச்சென்றவர் சடலத்தை தூக்கி வந்தார்

தென்மராட்சி, ஒக். 7

நேற்று முன்தினம் பகல் மட்டுவிலிலிருந்து புத்தூரில் உள்ள தனது வீட்டில் உள்ள பொருள்களை எடுக்கச்சென்ற குடும்பஸ்தர் ஒருவர் படையினரின் ஷெல் வீச்சின் அதிர்வினால் மரணமடைந்தார்.

இவருடன் கூடச்சென்றவர் புத்தூரில் இருந்து வண்ணாத்திப்பாலம் அரை மூன்று மைல் தூரத்திற்கு சடலத்தை தோளிலேசுமந்து வந்து உறவினரிடம் ஒப்படைத்தார்.

சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த செ. சுந்தரலிங்கம் (வயது 45) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார். (இ-117)

# நெல்விதைப்பு ஆரம்பம்

மானிப்பாய், ஒக். 7

வியாழக்கிழமை பெய்த மழையைத் தொடர்ந்து இராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்படாத யாழ். குடாநாட்டு வயல்களில் நெல்விதைப்பு ஆரம்பமாகி உள்ளது. (இ-90)

# மனையியல் செய்முறை பரீட்சை

கொழும்பு, ஒக். 7

கடந்த ஓகஸ்டில் நடந்த ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சைக்கான மனையியல் பாடத்தின் செய்முறைத் தேர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார். (ஐ)

## ஆத்மஜோதி முத்தையாவின்

# இறுதிக்கிரியையில் பெரும் அளவில் ஈழத் தமிழர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 7

கடந்த மாதம் 8 ஆம் திகதி கனடாவில் சிவபதமடைந்த இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையாவின் பூதவுடல் கடந்த 16 ஆம் திகதி கனடாவில் றொறன்ரோ நகரில் தீயுடன் சங்கமமானதாக யாழ்ப்பாணத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்கள் ஏராளமாக கூடி அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

ஆத்மஜோதியின் சகோதரரான நாகமணி கந்தையாவின் மகன் நியூயோர்க்கில் இருந்து வந்து சிதைக்கு தீமூட்டினார் என்றும்—

கனடா இந்து சமயப் பேரவை அங்குள்ள இந்து அமைப்புக்கள் இறுதிக்கிரியைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தன என்றும்-யாழ். இந்து சமயப் பேரவையின் பதில் தலைவர் ஆ. மகாலிங்கம் தெரிவித்தார். (இ-3)

# பேராதனை பல்கலைக்கழகம் திறக்கப்படும்

கொழும்பு, ஒக். 7

பேராதனைப் பல்கலைக் கழகம் இம்மாதம் பதினேழாம் திகதி திறக்கப்பட உள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகக் கவுன்ஸில் உறுப்பினர்களுக்கும் கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரணவுக்கும் இடையில் புதன் கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் (8 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய பாதுகாப்பு நிதி சேகரிக்கும் இட விவரம்

## யா/உதவி அரச அதிபர் பிரிவு

| திகதி | கிராமசேவகர் பிரிவு | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 08-10 95 | J/ 61, 62, 63 | காலை 9-00 — 12-00 வரை | கொழும்புத்துறை மேற்கு ச.ச. நிலையம் |
| 08-10-95 | J/ 64, 65, 66 | பி. ப. 2-00 — 5-00 வரை | சென். அன்ரனிஸ் வித்தியாலயம் பாஷையூர் |
| 09-10-95 | J/ 67, 68, 69 | காலை 9-00 — 12-00 வரை | றெக்கிள மேசன் ச.ச. நிலையம் குருநகர் |
| 09-10-95 | J/ 70, 71, 72 | பி. ப. 2-00 — 5-00 வரை | குருநகர் ச. ச. நிலையம் |
| 10-10-95 | J/ 73, 74 | காலை 9-00 — 12-00 வரை | மடம் வீதி கலை பண்பாட்டுக் கழக அலுவலகம் |
| 10-10-95 | J/ 75, 76 | பி. ப. 2-00 — 5-00 வரை | கண்டிக்குழி வடக்கு ச. ச. நிலையம் |
| 11-10-95 | J/ 77, 78 | காலை 9-00 — 12-00 வரை | ஆயுள்வேதக் கல்லூரி அத்தியடி |
| 11-10-95 | J/ 79, 80, 81, 82, 83 | பி. ப. 2-00 — 5-00 வரை | புதிய விஞ்ஞான கல்வி நிலையம் கன்னாதிட்டி |
| 12-10-95 | J/ 84, 86 | காலை 9-00 — 12-00 வரை | சென். நீக்கலஸ் ச. ச. நிலையம் |
| 12-10-95 | J/ 85, 87, 88 | பி. ப. 2-00 — 5-00 வரை | சென். மேரிஸ் ச. ச. நிலையம் |

குறிப்பு: ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் தினமும் செலுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரச்சாவு

### இரத்தினம் ஜெயக்குமார் (இராசன்)
### போராளி ஆதவன்

வலி கிழக்கில் ஏற்பட்ட நேரடி மோதலில் அவரங்கால் கிழக்கு, 10 ஆம் கட்டையடி, கோணேஸ் வீதியைச் சேர்ந்த இரத்தினம் ஜெயக்குமார் 02-10-95 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவர் இரத்தினம் சரஸ்வதியின் அன்பு மகனும், ஜெனார்த்தனி, பாலகுமார், சசிகுமார் (போராளி) கஜேந்திரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவரின் இறுதி நிகழ்வு 05-10-95 அன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
இரத்தினம் குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி:
திரு. சுப்பிரமணியம்
அம்மன் கோவிலடி,
மாறன் வீதி,
மட்டுவில் வடக்கு. [38884]

## செல்லையா கெங்காதரம்
### [ராசன் – கருவண்ணன்]

மட்டுவில் வடக்கு காலஞ்சென்ற [வெற்றிலை வியாபாரி] செல்லையா – மனோன்மணி அவர்களின் புதல்வனும், சோதீஸ்வரி [கலைப்பீடம் முதலாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்], கெங்காதேவி, குமுதவல்லி ஆகியோரது அருமைச் சகோதரருமான கெங்காதரம் [ராசன் – கருவண்ணன்] 03 – 10 – 95 அன்று அச்சுவேலியில் நடைபெற்ற சமரில் வீரச்சாவடைந்துவிட்டார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. நிர்மலேந்திரன்
[சகோதரன்]

முகவரி:
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. [38903]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செபமாலை எலிசபெத்

பலாலி தெற்கு சென். யேம்ஸ் வீதியைச் சேர்ந்தவரும், தற்பொழுது இல 18, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான திருமதி செபமாலை எலிசபெத் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் செபமாலையின் அன்பு மனைவியும், லூர்து பாலநாயகி, யோசேப் மரியநாயகம், பேரின்பநாயகம் (கனடா), பற்றிமா இராசநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (7.10.95) சனிக்கிழமை பி.ப. 3-30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலியின் பின், சொஞ்சேஞ்மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. யோ. மரியநாயகம்
[சுதந்திரராசா] மகன்

நூலகம்,
யாழ் பல்கலைக்கழகம். (38904)

### பாலரத்தினம் தர்மலிங்கம்

அராலி வடக்கைச் சேர்ந்த பாலரத்தினம் தர்மலிங்கம் 6 – 10 – 95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலரத்தினம் – நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாநாயகம் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், உருத்திரநாயகியின் அன்புக்கணவரும், சரோஜினிதேவி, நடேஸ்வரன், தனேஸ்வரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற கனகம்மா, மற்றும் திருநாவுக்கரசு, சிவசுப்பிரமணியம், சபாரட்ணம், விஜயரட்ணம், சர்வேஸ்வரி, இராமநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 7 – 10 – 95 முற்பகல் 9.00 மணியளவில் நல்லூரில் உள்ள அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
த. உருத்திரநாயகி
[மனைவி]

தற்காலிக வதிவிடம்:
திருமதி ஆனந்தராஜா நாகேஸ்வரி,
465/16 A, நல்லூர் வடக்கு வீதி,
நல்லூர். [சி/2434]

## ஒய்வூதிய வவுச்சர் வங்கியில்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான இம்மாதத்துக்குரிய வவுச்சர்கள் எதிர் வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் வழமை போல வங்கிகளில் வைத்து வழங்கப்படும் என்று செயலக ஓய்வூதியப் பிரிவு கணக்காளர் திரு. எஸ். வீரசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேரடியாக வங்கிக்கு செல்ல முடியாத ஒய்வூதியர்கள் பற்றுச்சீட்டை பெறுவதற்கான அதிகாரக்கடிதத்தையும், தங்களது அடையாள அட்டையையும் வருபவரிடம் கொடுத்து அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார்.

உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியர்களின் இம்மாத வவுச்சர்கள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### மட்டக்களப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாக்காடு இராணுவமுகாமில் இருந்து 3 பவள் கவச வாகனங்கள் சகிதம் உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் மற்றொரு அணி கடும் எதிர்த் தாக்குதலை நடத்தி அவர்களை திருப்பி அனுப்பியது.

இதன்போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிவரம் தெரியவரவில்லை.

மினி முகாம் மீதான இத் தாக்குதலில் —

ஏ. கே. எல். எம் ஜி — 1, அதற்குரிய ரம் ரவைக் கூடுகள் — 4, அதற்குரிய ரவைகள் இணைப்பியுடன் — 300, ஏ. கே. ரக துப்பாக்கி — 9, அதற்குரிய ரவைக்கூடுகள் — 22, தொலைத் தொடர்பு சாதனம் 1, கிளைமோர் — 1, பரா லைட் — 3. நடுத்தர ரவைகள் — 1460 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் 2 ஆம் லெப்டினன்ட் ரகுராமநாதன் அல்லது பாஸ்கரன் செல்வராஜா வரதராஜா — மட்டக்களப்பு என்ற போராளி வீரமரணமடைந்தார். [இ-3]

### வேரோதனை...

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து பல்கலைக்கழகத்தைத் திறக்க முடிவு செய்யப்பட்டது.

வேரோதனைப் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் மூடப்பட்டதோடு, விடுதிகளை விட்டு வெளியேறுமாறு மாணவர்கள் கேட்கப்பட்டனர்.

''ராகிங்'' கலாட்டாவில் ஈடுபட்ட மாணவர்கள் சிலரை பல்கலைக்கழக நிர்வாகம் தண்டித்திருந்தது. அத்தண்டனை வாபஸ் பெறவேண்டும் என்பது மாணவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. [அ]

### குடாநாட்டில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பனை செய்வது பற்றியும் யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் ஆராய்ந்து வருகிறது.

வெதுப்பகத் தொழிலாளர்கள், பாவனையாளர்களின் நன்மை கருதி இவ்விடயம் ஆராயப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் திரு த. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதற்கிடையில் மாவை உடனடியாக அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அவசர கோரிக்கை ஒன்று கொழும்பில் உள்ள அரச அதிபருக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் ஊடாக யாழ். செயலகம் இந்தத் தகவலை அனுப்பிவைத்தது. (இ-3-4)

# தீர்வு யோசனைகள் மிகத் தெளிவானவை

## கென்னத் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 7

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு ஜனாதிபதி சந்திரிகா சமர்ப்பித்துள்ள யோசனைகள் மிகவும் தெளிவானவை. இந்த யோசனைகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெரிதும் உதவும்.

இவ்வாறு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அங்கிலிக்க ஆதீன சபையின் 110 ஆவது மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தீர்வு யோசனைகளை கவனமாகப் படித்து அவற்றைச் சாதகமாக நோக்குமாறு விடுதலைப்புலிகளுக்கும் ஆயர் கென்னத் பெர்னான்டோ அழைப்பு விட்டார்.

சமாதானத்தை உருவாக்குவதற்குப் பாடுபடுவோர் எதிர்நோக்கக் கூடிய கஷ்டங்களையும், தண்டனைகளையும் அவர் விவரித்தார். எனினும் சமாதானத்தை உருவாக்குவதற்குச் சகலரும் உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆயர் என்ற வகையில் அரசியலில் எந்தத் தரப்புடனும் இனங்காட்டிக் கொள்ளக் கூடாது என்பதே தமது விருப்பமாக இருந்த போதிலும்— சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே தாம் யாழ்ப்பாணம் சென்ற அரச சமாதானத் தூதுக்குழுவில் பங்குபற்ற இணங்கியதாகவும்— ஞாபகப்படுத்தினார். (அ)

### இளம் தாயும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கற்கோவளம், மணற்காடு, துன்னாலை, திக்கம், வல்வெட்டித்துறை பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

ஷெல்லுக்கு இலக்காகி வல்வெட்டித்துறைப் பகுதியில் வயோதிப மாதுவும் சிறுமி ஒருத்தியும் காயமடைந்து வல்வை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஷெல் தாக்குதல்களை அடுத்து இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பதுங்கு குழிகளில் இரவைக் கழித்தனர். (ஐ-எ-173)

## முக்கிய அறிவித்தல்

தமிழீழப்பிரதேசத்தில் தயாரிக்கப்படுகின்ற நாட்காட்டிகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து வடிவங்களினதுமான நாட்காட்டிகள் அல்லது நாட்காட்டித் தயாரிப்புக்கான படங்கள், கடைகளில் விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படுவது அல்லது விற்பனை செய்யப்படுவது அல்லது வேறு வகைகளில் விநியோகிக்கப்படுவது இன்றிலிருந்து [07-10-95] முற்றிலும் தடை செய்யப்படுகிறது என்பதை வணிகத் துறையினர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

— யாழ் வணிகர் கழகம்.

(சி-2430)

### பழைய மாணவர் சங்கம்
### வேம்படி மகளிர் கல்லூரி
## வருடாந்த பொதுக்கூட்டம் 1995
### இடம் மாற்றம்

8 - 10 - 95 ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் மேபிள் தம்பையா மண்டபத்தில் நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரிக்கருகில் இருக்கும் வேம்படி வீதியில் உள்ள றிமர் மண்டபத்தில் (Trimmer Hall) நடைபெறும்.

= செயலாளர்
பழைய மாணவர் சங்கம்.

(சி/2433)

## மரண அறிவித்தல்

### கந்தப்பு பொன்னம்பலம்
[பிஸ்கால் பென்சனியர்,
கேணிக்காரப் பொன்னம்பலம்]

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகக் கொண்ட கந்தப்பு பொன்னம்பலம் 26-09-95 காரைநகரில் காலமானார்.

இவர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் பரமநாதன், இரத்தினசிங்கம், சவுந்தராதேவி. தர்மலிங்கம், வைத்தீஸ்வரன், விக்கினேஸ்வரன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 27-09-95 அன்று காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கேதீஸ்வரன்
[மகன்]

தற்போதைய முகவரி:
மேல்மாடி
துணைவிச்சந்தி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. [38902]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 7 – 10 – 95 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org